## முதல்வரின் அறிவுறுத்தல்படி - நெல் மூட்டைகள் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது!

# நெல் கொள்முதல் - நடவுப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறோம்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி புள்ளி விவரங்களுடன் விளக்கம்!

**சென்னை, அக். 18 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் (16.10.2025) சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசுகையில், கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது எனவும், நெல் கொள்முதல் மற்றும் நடவுப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறோம் எனவும் புள்ளி விவரங்களுடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த விளக்கம் வருமாறு:-

**நவீன நெல் சேமிப்புக் கிடங்குகள்!**

**அமைச்சர் அர.சக்கரபாணி:** ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு தமிழகத்திலே டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு 2025-2026 ஆம் ஆண்டிலே அரசாணை வெளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளியெல்லாம் கோரப்பட்டு விட்டது. உறுப்பினர் அவர்கள் புதிதாக 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைக்க சுமார் 5 ஏக்கர் இடம் இருக்கிறது என்று சொல்கிறார். முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, நிதிநிலைக்கேற்ப தேவை ஏற்படும்பட்சத்தில் வருகின்ற ஆண்டு நிச்சயமாக அங்கே சேமிப்புக் கிடங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**வி.பி. நாகைமாலி:** டெல்டா மாவட்டத்திலே, இந்த ஆண்டு குறுவை விவசாயம் கடந்த ஆண்டைவிட 4 பங்கு கூடுதலாக செய்யப்பட்டிருக்கிறது. உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் பொறுப்பு அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகிய அமைச்சர்களுக்கெல்லாம் இது தெரியும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுடைய நெல்லை கொள்முதல் செய்கிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட, இப்பொழுது கொள்முதல் நிலையங்களுக்கு வந்து நேரடியாக ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு உடனடியாக எல்லா நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கூறி வந்திருக்கிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று சிறப்பாக ஆய்வு செய்தார் என்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் சார்பிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இவ்வளவு இருந்தும், ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் மூலமாக வருகிறது. நீங்கள் 4,000 லாரிகளை இதற்காக ஏற்பாடு செய்து நெல்லை எடுக்கின்றோம் என்று கூறியிருக்கிறீர்கள், நன்றி. ஆனால், அது போதாது. இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து, நெல் இன்னும் தேங்கி இருக்கிறது; நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே மழையும் பொழிகிறது; ஆகையால் சிரமமாக இருக்கிறது என்று ஏராளமான தகவல்கள் எனக்கு வருகின்றன. ஆகவே, கொள்முதல் செய்த நெல்லை உடனுக்குடன் லாரியில் ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்தால் இன்னும் கூடுதலாக விவசாயிகளுக்கு நன்மை பயக்கும். விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும். மேலும், இது தீபாவளி நேரமும்கூட. அதை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதை செய்வார்களா? உடனடியாக அன்றாடம் நெல்லை ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறி, அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** நாகப்பட்டினம் மாவட்டம் மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்கள் மட்டுமல்லாமல், மற்ற NON-DELTA மாவட்டங்களிலும், இந்த ஆண்டு நெல் கொள்முதல் அதிகரித்திருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி இங்கே விரிவாக நானும் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

**குறுவை சாகுபடி பரப்பு அதிகரிப்பு!**

முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த ஆண்டு குறிப்பிட்ட நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து 12-6-2025 அன்று குறுவைப் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டதாலும், ஆறுகள், வாய்க்கால்கள் உள்ளிட்டவை முறையாக தூர்வாரப்பட்டதாலும், குறுவைத் திட்டத் தொகுப்பு பரவலாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்யும் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. சென்ற ஆண்டு 3.5 இலட்சம் ஏக்கராக இருந்தது. அது இந்த ஆண்டு 6.13 இலட்சம் ஏக்கராக அதிகரித்திருக்கிறது. இது இதுவரை இல்லாத வரலாற்று சாதனை என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் பருவம் வழக்கமாக அக்டோபர் மாதம்தான் தொடங்கும். முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசினுடைய பிரதம அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதையடுத்து, கடந்த 4 ஆண்டுகளாக அக்டோபர் மாதத்திற்கு பதிலாக செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியே ஒன்றிய அரசால் உயர்த்தப்படுகின்ற ஆதார விலையோடு இன்றைக்கு அரசு ஊக்கத் தொகையாக கொடுக்கின்ற விலையையும் சேர்த்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, சன்ன இரகத்திற்கு ரூ. 2.545/-ம், பொது இரகத்திற்கு ரூ. 2.500/-ம் கொடுக்கிறது. தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு வெளிச்சந்தைகளில் வியாபாரிகள் நெல்லை விற்பனை செய்ய ஆர்வம் காட்டவில்லை. அதனாலும், குறுவை சாகுபடியின் அமோக விளைச்சலாலும், வரலாறு காணாத அளவில் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல்வரத்து அதிகரித்துள்ளது. எடுத்துக்காட்டாக, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு நான், எங்கள் துறையின் துறையின் செயலாளர், மேலாண்மை இயக்குநர், ஆணையர் ஆகியோர் சென்றபோது நீங்களும் வந்தீர்கள். DPC-க்கு சென்று பார்த்தோம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 13 மடங்கு நெல் உற்பத்தி அதிகரித்திருப்பதால் நெல்வரத்து அதிகரித்திருக்கிறது. எனினும், அவற்றை நாங்கள் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம்.

**கூடுதல் லாரிகள்!**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் நாங்கள் கூட்டத்தை நடத்தி, கூடுதல் லாரிகளை இயக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தாங்கள் கூடுதல் லாரிகளை இயக்க வேண்டும் என்று கேட்டீர்கள். திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், செங்கல்பட்டு என அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் லாரிகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.



கடந்த கொள்முதல் பருவத்தில் 13-10-2024 வரை கொள்முதல் செய்யப்பட்ட நெல் 3.3 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். ஆனால், நடப்பாண்டில் நேற்று வரை 1,805 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 9,02,468 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 1,16,950 விவசாயிகளுக்கு சுமார் 2,152 கோடி ரூபாய் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அதாவது, கடந்த ஆண்டு 3.3 இலட்சம் மெட்ரிக் டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு சுமார் 9 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. சுமார் 5 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கும்மேல் நெல்வரத்து அதிகரித்திருக்கிறது.

**புதிய விலைப் புள்ளிகள் - பணியாணை!**

நடப்புக் கொள்முதல் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்து அரிசியாக்கி அதனுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை கலக்க வேண்டும் என்று தற்போது ஒன்றிய அரசு ஒரு புதிய வழிகாட்டு நெறிமுறையை வகுத்துள்ளது. 100 கிலோ அரிசியில் 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசி, FORTIFIED RICE-ஐ சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வழிகாட்டு நெறிமுறையை முதலிலேயே அளித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். 29-7-2025 அன்றுதான் அந்த புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியதால், புதிய விலைப்புள்ளிகள் கோரப்பட்டு, 7-10-2025 அன்று 34,000 மெட்ரிக் டன் செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதல் செய்திட பணியாணை வழங்கப்பட்டது. இதற்கான தர உறுதி ஒப்புதல் ஒன்றிய அரசிடமிருந்து பெற வேண்டியுள்ளதால், நடப்புப் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 9 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை உடனுக்குடன் அரவை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், அவை சேமிப்புக் கிடங்குகள் மற்றும் அரவை ஆலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இதனால்தான், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் 3, 4 தினங்களில் அதற்கான தர உறுதி ஒப்புதலை ஒன்றிய அரசு அளித்துவிடும். அது பெறப்பட்டவுடன், கொள்முதல் செய்யப்பட்ட நெல் அனைத்தையும் அரவை செய்து அரிசியாக்கி அதனுடன் செறிவூட்டப்பட்ட அரிசியைக் கலந்து பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். அதனால்தான், காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், டெல்டா மாவட்டங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, கடந்த அக்டோபர் மாதம் 2 ஆம் தேதியன்று காணொலி வாயிலாக என்னுடன், வேளாண்-உழவர் நலத் துறை அமைச்சர், தொழில் துறை அமைச்சர், எங்கள் துறையின் செயலாளர், மேலாண்மை இயக்குநர், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஆணையர் மற்றும் டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தி, நீங்கள் உடனடியாக அந்த மாவட்டங்களுக்குச் சென்று, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை உடனடியாக கொள்முதல் செய்து, அவற்றை சேமித்து வைத்து, மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில், தற்போது கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரவை ஆலைகளுக்கு துரிதமாக அனுப்பப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்களுடனான ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு, 3-10-2025 வரை 2,84,208 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து பாதுகாப்பாக கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நெல் கொள்முதல் சேமிப்பிற்காக கடந்த 4 ஆண்டுகளில் 54 எண்ணிக்கையிலான 7,33,250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்குகள் ரூ.825 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டு, நாளதுவரை 26 எண்ணிக்கையிலான 4,03,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கின்றன. மேலும், 3 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 28 நவீன சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணிகளைத் துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலிருந்த கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் 2011-2021 வரை கட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகளைக் காட்டிலும் முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற 53 மாதகால ஆட்சியில் அதிகமான சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்கும், இங்குள்ள மற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**துரித நடவடிக்கை!**

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மண்டலங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை கிடங்குகளில் பாதுகாத்திடவும், பிற மண்டலங்களுக்கு இயக்கம் செய்ய துரிதப்படுத்திட கடந்த 3 நாட்களாக 9, 10, மற்றும் 11 ஆகிய தேதிகளில் அந்த 5 மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, அந்தப் பணியில் ஈடுபட்டு, நெல்லை உடனடியாக மற்ற மாவட்டங்களுக்கும், அரவை ஆலைகளுக்கும் அனுப்புவதற்கு நாங்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கிறோம். துரித நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தலைமை அலுவலகத்திலிருந்து 5 பொது மேலாளர்கள், 4 மேலாளர்கள் தலைமையில் 9 குழுக்களும், வட்ட அளவில் 12 மேலாளர்கள் தலைமையிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு, டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் மற்றும் இயக்க பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் நகர்வு பணியினை கண்காணிக்க துணை மேலாளர் நிலையில் தலா 3 குழுக்கள் அமைக்கப்பட்டு, நெல் இயக்கம் விரைவுப்படுத்தப் பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் இவ்வளவு நெல் வரத்து அதிகமாகியிருக்கின்ற காரணத்தால், இப்பணிக்கு போதுமான சுமைத்தூக்கும் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. வெளி மாவட்டங்களிலிருந்து சுமைத் தூக்கம் தொழிலாளர்களை கொண்டு வந்து டெல்டா மாவட்டங்களில் பணியமர்த்தியிருக்கிறோம்.

நெல் வரத்து அதிகம் வருவதை கருத்தில்கொண்டு, கொள்முதல் செய்கின்ற நேரத்தில், தற்போது நெல் அதிகமாக வருகின்றது என்றால், ஒரு இடத்தில் TAPE. ஒரு இடத்தில் 800 மூட்டைதான் வாங்குவார்கள். தற்போது 1,000 மூட்டைகளை வாங்குவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். மாலை 6 மணியுடன் வேலையை நிறுத்திவிடுவார்கள். தற்போது 8 மணி வரை வாங்க சொல்லியிருக்கிறோம். ஞாயிற்றுக்கிழமை LEAVE ஆகயிருந்தாலும், ஞாயிற்றுக் கிழமையும் நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உதாரணத்திற்கு ஒரத்தநாட்டில், புதூர் என்ற ஊராட்சியில் இரண்டு TAPE போட்டு வாங்குகிறோம். அதே மாதிரி திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 TAPE போட்டு, 3 MACHINE. தினந்தோறும் 3,000 நெல் மூட்டைகளை வாங்கி கொண்டிருக்கிறோம். ஆகையால், தற்போது விடுமுறை தினங்களிலும் நெல்லை வாங்கிக் கொண்டிருக்கிறோம். கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை நகர்வு செய்வதற்கு நாளொன்றுக்கு 8 அல்லது 9 சரக்கு WAGON மூலமாக அனுப்பிக் கொண்டிருக்கிறோம். லாரி வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். 4,000 லாரிகளில் நாங்கள் நெல்லை அனுப்பி கொண்டிருக்கிறோம்.

**டெல்டா மாவட்டங்களில் நெல் சேமிப்பு!**

இன்னும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுரை, கடலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக லாரிகளை ஏற்பாடு செய்து வெளி மாவட்டங்களுக்கு நகர்வு செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நாங்கள் அறிவுரை வழங்கியிருக்கிறோம். குறிப்பாக சேமிப்பதற்கும் நகர்வு செய்யப்படுகிறது. கடந்த காலங்களில் இதுபோன்று இரயில் WAGON-களில் நெல்லை கொண்டு செல்லவில்லை. இருந்தாலும், வெளி மாவட்டங்களுக்கு தற்போது நெல்லை அனுப்பிட தற்போது இந்திய இரயில்வேயின்மூலம் 9 சரக்கு இரயில்கள் தினந்தோறும் கொண்டு செல்கிறோம். கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமென்றாலும், இன்னும் 4 WAGONS ஒதுக்கிடவும், அதற்கேற்ப மதுரை கோட்டத்திற்கு கூடுதல் பணியாளர்களை ஒதுக்கிடவும், நமது அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் நேரடியாக கடிதம் எழுதியிருக்கிறார்; தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு RAIL WAGON-களை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

நடப்பு ஆண்டு அதிகப்படியான நெல் வரத்தின் காரணமாக டெல்டா மாவட்டங்களில் 3.3 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 25 OPEN CAPSULE திறந்த வெளி சேமிப்பு கிடங்குகளை திறக்க . . . (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் இது சம்பந்தமாக . . . (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் பொது வெளியில் பல்வேறு கட்சித் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள், தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும் தினந்தோறும் டெல்டா மாவட்டங்களில் அதிகப்படியான நெல் தேங்கி கிடக்கிறது என்றும், கொள்முதல் செய்ய வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் தெளிவான விளக்கத்தை கொடுத்து கொண்டிருக்கிறேன். உறுப்பினர் கேட்டதால் இதனை கேள்வி நேரத்தில் நான் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் இதற்கு தெளிவான விளக்கம் அளிக்க வேண்டுமென்பதை சொல்லிவிட்டேன்.

**கொள்முதல் செய்ய தேவையான சாக்குகள் இருப்பு உள்ளது!**

நடப்பாண்டில் அதிகப்படியான நெல் வரத்தின் காரணமாக, டெல்டா மாவட்டங்களில் 3.3 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 25 திறந்தவெளி சேமிப்பு கிடங்குகள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டு, 77,196 மெ.டன் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் தேக்கம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், நெல் கொள்முதல் செய்ய தேவையான சாக்கு இல்லை என்று சொல்கிறார்கள். 2 கோடியே 65 இலட்சம் சாக்கு இருக்கிறது. அதேமாதிரி சணல் 1,071 BALES இருக்கிறது. LDPE COVER 31.101 இருக்கிறது. அதே மாதிரி LDPE SHEET 34.223 போதுமானதாக இருக்கிறது.

ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின் பேரில் ஈரப்பதத்தை 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு ஒன்றிய அரசிடம் இது சம்பந்தமாக கேட்டிருந்தோம். முதலமைச்சர் . . . (குறுக்கீடு)

ஈரப் பதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்றால் ஒன்றிய அரசு அனுமதி தர வேண்டும். தற்போது 17 சதவிகிதத்தில் தான் வாங்கி கொண்டிருக்கிறோம். 22 சதவிகிதம் வேண்டுமென்று சென்ற ஆண்டு கேட்டோம். அதிகாரிகளெல்லாம் புது டெல்லியிலிருந்து வந்து பார்வையிட்டு சென்றார்கள். ஆனால் அனுமதி தரவில்லை.

இந்த ஆண்டு இப்போது வேண்டுமென்று கேட்கிறார்கள். மழை அதிகமாக வந்தால், அந்த நேரத்தில் ஈரப் பதத்தை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு, ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதி, ஈரப் பதத்தை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த ஆண்டு 1-9-2025 முதல் 14-10-2025 வரை சுமார் 9 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு, இதுவரை 6,07,993 மெட்ரிக் டன் நெல் நடவு செய்யப்பட்டு, 2,30,556 மெட்ரிக் டன் நெல் நடவு செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. நடவு செய்யப்பட வேண்டிய நெல் மூட்டைகள் பிளாஸ்டிக் கவர்கள்மூலம் மூடப்பட்டு பாதுகாப்பாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நெல் கொள்முதல் மற்றும் நடவுப் பணிகள் போர்க்கால அடிப்படையில், இந்தப் பணிகளை செய்து வருகிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு--இந்தக் கேள்வி, நிறையபேர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அத்தனை உறுப்பினர்களுக்கும், டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கும் இதை நான் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கம் அளித்தார்.

---

## 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நியாய விலைக் கடைகள் திறக்கும் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்!

# முதலமைச்சரின் தாரக மந்திரமே “எல்லோருக்கும் எல்லாம்” - பாகுபாடு பார்க்க மாட்டோம்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் ஜி.கே.மணி கேள்விக்கு – அமைச்சர் அர.சக்கரபாணி பதில்!

*சென்னை, அக்.18 - சட்டப் பேரவையில் பா.ம.க. உறுப்பினர் ஜி.கே. மணி நியாய விலைக் கடைகள் திறப்பது குறித்து கேள்வி எழுப்பினார். அப்போது உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி 234 சட்டமன்ற உறுப்பினர்களும் கடைகள் திறக்க வேண்டிய பட்டியலை கொடுங்கள் அனைத்தையும் நிறைவேற்றுகிறேன் என்றும், முதலமைச்சரின் தாரக மந்திரமே “எல்லோருக்கும் எல்லாம்” என்பதுதான். பாகுபாடு பார்க்க மாட்டோம் என்று குறிப்பிட்டார்.*

*இது குறித்த விவாதம் வருமாறு:-*

**ஜி.கே. மணி:** *முடித்து விடுகிறேன். என்னுடைய பெண்ணாகரம் தொகுதியில் நியாய விலைக் கடைகளை பிரிக்க வேண்டுமென்று சொன்னால், அதிகாரிகள் காரணங்கள் சொல்கிறார்கள். 2 கிலோ மீட்டர்இரண்டரைகிலோ மீட்டர் செல்ல வேண்டும். பேருந்து வசதியே இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. குடும்ப அட்டையின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட, சற்று விதியை தளர்த்தி, அவர்களுக்கு உடனடியாக நியாய விலைக் கடையை பிரித்துக் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டியல்களை கொடுத்திருக்கிறேன்.*

**அமைச்சர் அர. சக்கரபாணி:** *அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் எந்தெந்த கடைகள் என்ற பட்டியலை என்னிடம் கொடுங்கள். ஒரு வாரத்தில் உங்களுக்கு நான் அனுமதி தருகிறேன். போதுமா! பட்டியலை என்னிடம் கொடுங்கள்.*

**ஜி.கே. மணி:** *இப்படி தான் இருக்க வேண்டும் அமைச்சர். சொன்னவுடன் நடக்கிறது. அமைச்சருக்கு நன்றி.*

**அமைச்சர் அர. சக்கரபாணி:** *தளி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன் அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு நான் சென்றிருந்தேன். அங்கே சென்றபோது, மலைப் பகுதி என்பதால் 23 நியாய விலைக் கடைகளை பிரிக்க வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்தார். நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சென்று கொண்டிருக்கிறோம். இதற்கிடையில் உறுப்பினர் இன்னும் நிறைய கடைகளுக்கு அனுமதி வரவில்லை. அமைச்சர் அவர்கள் அவற்றிற்கெல்லாம் அனுமதி வாங்கி கொடுத்துவிட்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்.*

*நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இடையில் காரை நிறுத்தி விட்டு, SECRETARY யிடம் பேசி, உடனடியாக அதற்கு அனுமதி கொடுங்கள் என்று சொன்னோம். அவரிடம் கோப்பு தேக்கமாக இருக்கிறது. உடனடியாக அனுமதி வாங்கி, திறக்க சென்றோம். 23 கடைகளையும் ஒரே நேரத்தில் தளி பகுதியில் திறந்தோம். அந்த மலைவாழ் மக்களெல்லாம் பட்ட சந்தோஷம், எங்களுக்கெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நிகழ்ச்சி முடிந்தவுடன் 2, 3 LADIES MIKEல் பேச வேண்டுமென்று சொன்னார்கள். ‘அதுதான் நிகழ்ச்சி முடிந்துவிட்டதே, எதற்காக பேச வேண்டும்’ என்று கேட்டேன். இல்லை நாங்கள் நன்றி சொல்லிவிடுகிறோம் என்று தெரிவித்தார்கள். நாங்கள் 8 கிலோ மீட்டர், 9 கிலோ மீட்டர் மலையிலிருந்து நடந்து வந்து, இதுவரையில் பொருள் வாங்கி வந்தோம். அதேபோல், வாங்கி செல்வதற்கு 10 கிலோ மீட்டர். பேருந்து வசதியெல்லாம் இல்லை. தற்போது இந்தக் கடையை திறந்து கொடுத்ததால், நாங்கள் எங்களுடைய வாழ்க்கையில் பெரிய சுதந்திரம் அடைந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.*

*அதனால் அண்ணன் ஜி.கே. மணி அவர்கள், தருமபுரி தொகுதி, பெண்ணாகரத்தில் எந்தெந்தக் கடைகள் திறக்க வேண்டுமென்ற பட்டியலைக் கொடுங்கள். ஒரு வாரத்தில் நான் உங்களுக்கு ORDER தருகிறேன். (குறுக்கீடு) எல்லோருக்கும்தான். உங்கள் கட்சிக்கும் பொருந்தும். இங்கு இருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும். அவருக்கு மட்டுமல்ல.*

**பேரவைத் தலைவர்:** *பார்த்தீர்களா, சமூக நீதி ஆட்சி. எல்லோருக்கும் வேறுபாடு இல்லாமல் செய்கிறார்கள்.*

**அமைச்சர் அர. சக்கரபாணி:** *முதலமைச்சர் அவர்களின் தாரகமந்திரமே “எல்லோருக்கும் எல்லாம்”. இதில் சாதியோ, மதமோ, கட்சியோ, இனமோ நாங்கள் பார்ப்பதில்லை. அஇஅதிமுக, திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பாமக என பார்ப்பதில்லை.*

**பேரவைத் தலைவர்:** *எப்படி எல்லோருக்கும் ரூ.1,000/ கொடுக்கிறோமோ அதே போன்று.*

**அமைச்சர் அர. சக்கரபாணி:** *எங்களுடைய ஆட்சியின் தாரகமந்திரமே “எல்லோருக்கும் எல்லாம்”. பாகுபாடு பார்க்க மாட்டோம். முதலமைச்சர் அவர்களே 234 தொகுதியும் சீரான வளர்ச்சி அடைய வேண்டுமென்று எங்களிடம் சொல்லியிருக்கிறார். நீங்கள் ஜெயித்த தொகுதியோ, தோழமைக் கட்சி ஜெயித்த தொகுதியோ என்று பார்க்காதீர்கள். எதிர்க்கட்சியாக இருந்தாலும் நீங்கள் அந்தத் தொகுதிக்கு வளர்ச்சிப் பணிகளைச் செய்ய வேண்டு மென்று சொல்லியிருக்கிறார். அப்படித்தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதனால் நீங்கள் பட்டியலைக் கொடுங்கள், செய்து தருகிறோம்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*